பக்கங்கள்: 09 விலை : 20/-
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 04 வியாழக்கிழமை 18.06.2020 கதிர் 93

உங்கள் 'காலைக்கதிர்' நாளை காலையில் இருந்து அச்சுப் பிரதியிலும் வெளிவருகின்றது. உங்கள் முகவர்களிடம் பெறலாம். விலை ரூபா 30/=

# சர்வதேசக் கண்காணிப்பாளர்களுக்கும் 2 வார தனிமைப்படுத்தலின் பின்பே பணி

## ஜனாதிபதி – தேர்தல்கள் ஆணையர்கள் நேற்றைய சந்திப்பின் போது தீர்மானம்

கொழும்பு, ஜுன் 18

எதிர்வரும் ஒகஸ்ட் 05ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேசக் கணிப்பாளர்கள் வழமை போல இம்முறையும் வருவார்கள். ஆனால் இரண்டு வாரகால தனிமைப்படுத்தல் விதிமுறையை அவர்கள் நிறைவு செய்து, கொரோனாத் தொற்று அற்றவர்கள் என்பதை நிரூபித்த பின்னரே அவர்கள் களத்தில் இறங்கித் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட அனுமதிக்கப் படுவார்கள்.

2☞

## கொரோனாவால் 6 மாதங்களுக்கு தேயிலை ஏற்றுமதி வரி நிறுத்தம்!

கொழும்பு, ஜுன் 18

தேயிலை ஏற்றுமதி தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள தேயிலை ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரியை 06 மாதங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி கமத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரணவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது.

இன்று முற்பகல் இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக, தேயிலை தொழிற்றுறை பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது.

அதில், தேயிலை தொழிற்சாலைகளின்

2☞

## மஹிந்த - ரணில் இடையே டீல்!

### தனித்து ஆட்சி அமைப்பதே தனது இலக்கு என்கிறார் சஜித்

கொழும்பு, ஜுன் 18

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் தான் டீல் வைத்து

2☞

## மத்திய வங்கி பிணைமுறி மோசடி: மைத்திரி - ரணிலிடம் வாக்குமூலம்

### சட்டமா அதிபர் அதிரடி

நல்லாட்சியில் மத்திய வங்கியில் இடம் பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, முன்னாள் பிரதமரின் ஆலோசகர் எஸ். பாஸ்கரலிங்கம் மற்றும் மக்கள் வங்கியின் முன்னாள் பொது முகாமையாளர் ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரினால், பதில் பொலிஸ்மா அதிபருக்கு இவ்வாறு பணிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் நிஷாரா ஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.

2☞

## 2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட்: இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணயச் சதி!




### மஹிந்தானந்த பரபரப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 18

இலங்கை - இந்திய அணிகளிடையே கடந்த 2011 ஆம் ஆண்டு நடந்த கிரிக்கெட் உலகக்கோப்பை இறுதிப் போட்டியில் ஆட்ட நிர்ணய சதி இடம்பெற்றது என அப்போது விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகே பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

2☞

## முகநூலில் அவதூறு பேசிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

### விளக்கமறியலில் வைத்தார் மன்னார் நீதிவான்

மன்னாரில் சட்டத்தரணி ஒருவருக்கு போலி முகநூல் ஊடாகக் குடைச்சல் கொடுத்தார் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மன்னார் தனியார் பாரவூர்தி சங்கத்தினரது அலுவலகக்

2☞

## சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுழைவோர் குறித்து அறிவியுங்கள்!

### வடக்கு சுகாதார பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 18

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குள் வரும் நபர்கள் தொடர்பில் உடனடியாகத் தகவல் தருமாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

2☞

## யாழ். மாவட்டத்தில் விடுவிக்கக்கூடிய காணிகள் அனைத்தையும் இராணுவம் விடுவித்துவிட்டது

### கட்டளைத் தளபதி ருவான் வணிகசூரிய தெரிவிப்பு



யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்புப் படையினரால் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பொதுமக்களின் காணிகள் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் விடுவிக்கப்படக்கூடிய காணிகள் அனைத்தையும் இராணுவம் விடுவித்துவிட்டதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

அத்துடன், எதிர்காலத்தில் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகத் தாம் ஆராய்ந்து வருகிறார் எனவும் தற்போது காணி விடுவிப்புத் தொடர்பாக

2☞

## புத்த மதத்தை காக்கவென கிழக்கில் பிடியளவு மண்கூட எடுக்கக்கூடாது

### வலியுறுத்தி ஜனாதிபதிக்கு சம்பந்தர் கடிதம்



கொழும்பு, ஜுன் 18

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் இடங்களை அடையாளம் கண்டு, பாதுகாப்பதற்கு என இலங்கை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட செயலணி, புத்த மதத்திற்கென ஏற்கனவே இருக்கும் இடங்களிற்கு மேலாக ஒதுபிடி நிலத்தைக்கூட கிழக்கில் எடுக்கக்கூடாது என்று வலியுறுத்தியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா. சம்பந்தன்.

முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரான சம்பந்தன் இந்த விவகாரம் தொடர்பில் அரச தலைவருக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதியுள்ளார்.

"புதிதாக நிலங்கள் எவற்றையும் எடுக்காது புத்த மதத்தைப் பாதுகாக்கவும் பேணவும் வளர்க்கவும் என்ன தேவையோ அவற்றைச்

2☞

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இறுதிப் போட்டியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முழுமையான பொறுப்புணர்வோடு இந்த விடயத்தைத் தாம் வெளிப்படுத்துகிறார் என தனியாரா தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ள அவர், எனினும் நாட்டில் குழப்ப நிலை ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு மேலதிக விவரங்களை அம்பலப்படுத்த விரும்பவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் தனது கருத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் எதனையும் அவா முன்வைக்கவில்லை.

இந்த விவகாரத்தில் கிரிக்கெட் வீரர்களை உள்ளீர்க்க விரும்பவில்லை. சில குழுக்கள் நிச்சயமாக ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டன எனவும் அந்த நேரத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்த மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்துள்ளார்.

மஹிந்தானந்த அளுத்கமகேயின் கருத்துக்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தனது டுவிட்டர் பக்கத்தில் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

## கொரோனாவால் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல், தேயிலை இறக்குமதி செய்யும் பெரும்பாலான நாடுகளில் கொள்வனவு ஒப்பீட்டளவில் குறைதல், விநியோக முகாமைத்துவத்திலான சிக்கல்கள், உற்பத்தியின் தரத்தை பேணுதல் ஆகியன முக்கிய சவால்களாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சிரமங்களுக்கு மத்தியில் தேயிலை தொழிற்றுறையை நிலையாக பேணி முன்னெடுத்துச் செல்லும் வகையிலான நிதியியல் நிவாரணமாகப் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களிடம் தற்போது அறவிடப்படும் கிலோ கிராமுக்கான 3.50 ரூபா தேயிலை ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரி, 06 மாதங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கொரோனா தொற்றின் பரம்பல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மத்தியிலேயே புதிய நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்.

இதேவேளை, இந்தியாவில் தற்பொழுது கொரோனா நோயின் பரம்பல் மிகத் தீவிரமாக அதிகரித்துள்ளது. அத்துடன் இந்நோய் காரணமான இறப்புக்களும் அதிகரித்து வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவிலிருந்து இரகசியமாக மீன்பிடிப்படகுகள் மூலம் தமிழ்நாட்டிலிருந்து சிலர் இங்கு வருகை தரலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவர்களால் இலங்கையில் கொரோனா தொற்று ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது.

அவ்வாறு எமது நாட்டுக்குள் வருகை தருபவர்களை சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தி பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் எமது நாட்டில் இந்நோய் பரவுவதைத் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

எனவே, இவ்வாறு யாராவது இரகசியமான முறையில் இந்தியாவிலிருந்து உங்கள் பிரதேசத்திற்குப் புதிதாக வருகை தந்திருந்தால் அவர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக உங்கள் பிரதேசத்திற்குரிய கிராம சேவையாளர், சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு அறியத்தரவும். அல்லது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் 24 மணிநேர அவசர அழைப்பெண் 021 222 6666 என்ற இலக்கத்திற்கு அறியத் தரவும் - என்றுள்ளது.

## சர்வதேசக் கண்காணிப்பாளர்களுக்கும் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி - தேர்தல் ஆணையாளர்கள் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பில் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டதாக நம்பகமாக அறியவந்தது.

கடந்த தடவை பொதுநலவாய அமைப்பு, ஐரோப்பிய ஒன்றியம், தென்கொரியாவின் அன்பிறில் அமைப்பு ஆகியவற்றின் சர்வதேசக் கண்காணிப்புப் பிரதிநிதிகள் இலங்கையில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அவர்களில் கணிசமானோர் இம்முறையும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடத் தயாராக இருக்கின்றார்கள் என்று ஆணையாளர்கள் தரப்பில் நேற்றைய சந்திப்பின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தெரிவிக்கப்பட்டது என அறியவந்தது.

"நாட்டுக்குள் வரும் எவரும் இரண்டு வார காலம் தனிமைப்படுதலில் இருந்த பின்னர் தாங்கள் கொரோனாத் தொற்று அற்றவர்கள் என்று நிரூபித்தால் மட்டுமே சமூகத்தில் சேர்ந்து செயற்பட அனுமதிக்கப்படுகின்றனர். தேர்தல் கண்காணிப்பாளர்கள் விடயத்திலும் இந்த விதிமுறையைத் தளர்த்த நாம் விரும்பவில்லை. பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோர் கண்காணிப்புப் பணிக்கு வருகின்றமையால் அவர்கள் மூலம் நாட்டுக்குள் கொரோனா தொற்றக் கூடிய - பரவக் கூடிய - ஆபத்து அதிகம் உண்டு. ஆகையினால் தனிமைப்படுத்தல் விதிமுறையை மீறாமல் அவர்களின் பணியைப் பெறவே விரும்புகின்றோம். சம்பந்தப்பட்ட கண்காணிப்புத் தரப்புகளுக்கு இதுகுறித்துத் தகவல் அனுப்பியுள்ளோம். நாட்டின் கட்டுப்பாட்டு ஒழுங்குகளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி உள்ளோம். அவர்களில் கணிசமானோர் தனிமைப்படுத்தல் விதிகளுக்கு அமைய, நாட்டுக்குள் வந்ததும் இரண்டு வாரா காலம் தனிமைப்படுத்தலில் இருந்த பின்னர், கண்காணிப்புப் பணிக்குச் செல்ல இணங்கியுள்ளனர். இந்தக் கட்டுப்பாட்டு விதி காரணமாக இம்முறை இப்பணிக்கு முன்வரும் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி இருக்கக் கூடும். அது தவிர்க்க முடியாதது" - இவ்வாறு தேர்தல் ஆணையாளர்கள் தரப்பில் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு நேரடியாக விளக்கமளிக்கப்பட்டது என அறியவந்தது.

அந்த விளக்கத்தை திருப்தியுடன் ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி இத்திட்டத்துக்கு அமைய கண்காணிப்பாளர்களைப் பணிக்கு அழைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்குத் தமது முழு ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்தினார்.

கண்காணிப்பாளர் பணிக்கான செலவின ஒதுக்கீடுகள் குறித்தும் நேற்றைய கலந்துரையாடலில் விரிவாக அலசி முடிவுகள் எடுக்கப்பட்டன என அறியவந்தது. (உ)

## யாழ். மாவட்டத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எவ்விதமான முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டம் தொடர்பாக இன்று (வியாழக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி மற்றும் முப்படை உயரதிகாரிகள் தலைமையில் பலாலியில் உயர் மட்ட கூட்டமொன்று நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பாக ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் தெரிவித்ததாவது:

இராணுவத்தினராகிய நாங்கள் பாதுகாப்பு விடயம் தொடர்பாக மிகவும் அக்கறையாகவும் தெளிவாகவும் செயற்பட்டு வருகின்றோம். அதிலும் குறிப்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மிகவும் அர்ப்பணிப்புடன் பாதுகாப்பு விடயம் குறித்து செயற்பட்டு வருகின்றார்.

அவர் பதவியேற்ற குறுகிய காலத்திற்குள் மூன்றுதடவைகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது கிழக்கு மாகாணம் மற்றும் ஏனைய மாகாணங்களிலும் இதுபோன்ற விசேட கூட்டங்கள் முப்படையினருடன் இடம்பெற்று வருகின்றன.

இருந்தபோதும், கடந்த டிசெம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கூட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முப்படையின் பிரதானிகளுடன் யாழ். மாவட்டத்தில் கூட்டம் இடம்பெற்றது. எனவே நேற்றைய தினம் விசேடமாக ஒன்றும் பேசப்படவில்லை.

அதிலும் குறிப்பாக காணி விடுவிப்பு பற்றி எந்த விடயமும் அதில் பேசப்படவில்லை. ஏனெனில் நாங்கள் இதுவரை 10 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பொது மக்களின் காணிகளை விடுவித்துள்ளோம். எங்களால் விடுவிக்கப்படக்கூடிய அனைத்து இடங்களையும் விடுவித்துள்ளோம்.

எனினும் எதிர்காலத்தில் பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக நாம் ஆராய்ந்து வருகின்றோம். தற்போதைய நிலைமையில் காணி விடுவிப்பு தொடர்பாக எவ்விதமான முடிவும் எடுக்கப்படவில்லை - என அவர் தெரிவித்தார்.

## முகநூலில் அவதூறு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'கட்டடம் நகர சபையினரால் திடீரென இடத்தழிக்கப்பட்டது மற்றும் சங்கத்திற்கான வாகனத் தரிப்பிட ஒதுக்கீடு தொடர்பில் நீதிமன்றத்தில் சங்கம் சார்பில் வழக்குத் தாக்கல் செய்த சட்டத்தரணி பா.டெனீஸ்வரனுக்கு எதிராக 'கழுகுப் பார்வை' என்ற முகநூல் கணக்கு ஊடாக இடைஞ்சல்கள் ஏற்படுத்தியவரே கைது செய்யப்பட்டார்.

தனக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலும் அச்சுறுத்தும் வகையிலும் அவரது பதிவுகள் அமைந்திருந்தன என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரான டெனீஸ்வரன் தெரிவித்தார்.

முகநூலில் அவதூறான வார்த்தைப் பிரயோகங்கள், இரு சமூகங்களைப் பிளவு படுத்துவது போன்ற பதிவுகள், மதத் துவேசத்தை ஏற்படுத்துகின்ற பதிவுகள் போடப்படுகின்றன. இது எதிர்காலத்தில் எமது சமூகத்தை சீரழித்து விடப்போகின்றது. எனவே இதனை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். முகநூலை பிழையாக பயன்படுத்தினால், தண்டனை மற்றும் நஷ்ட ஈடு கொடுக்க நேரிடும் என்ற விழிப்புணர்வு மக்களைச் சென்றடைய வேண்டும். அதற்கான ஒரு நடவடிக்கையே இதுவாகும் என்றார் அவர்.

இவ்விடயம் தொடர்பாக பா.டெனிஸ்வரன் கருத்து தெரிவிக்கையில் -

தற்போது முகநூல் ஊடாக பல்வேறு நன்மையான விடயங்கள் காணப்படுகின்றன, உதாரணமாக கல்வி, மருத்துவம், சட்டம், மற்றும் அறிவியல் சார்ந்த பல ஆரோக்கியமான கருத்து பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன, இருந்தபோதும் ஒருசிலர் முகநூலை பிழையாக பயன்படுத்துகின்றனர்.

அவதூறான வார்த்தைப்பிரயோகங்கள், இரு சமூகங்களை பிளவுபடுத்துவது போன்ற பதிவுகள், மற்றும் மத துவேசத்தை உண்டு பண்ணுகின்ற பதிவுகள் போடப்படுகின்றன. இது எதிர்காலத்தில் எமது சமூகத்தை சீரழிக்கும் விடயமாக இருக்கப்போகின்றது. எனவே இதனை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். முகநூலை பிழையாக பயன்படுத்தினால், தண்டனை மற்றும் நஷ்ட ஈடு கொடுக்க நேரிடும் என்ற விழிப்புணர்வு மக்களுக்கு சென்றடைய வேண்டும்.

அதற்கான ஒரு நடவடிக்கையே இதுவாகும் எனவும், மேலும், இவ்வழக்கு தொடர்பில் இன்னும் சிலபேர் கைது செய்யப்படலாம் என்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவித்திருந்தார்.

## மஹிந்த – ரணில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செயற்பட்டு வருகின்றனர். ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியினர் அரசுடனோ அல்லது எந்தக் கட்சியுடனுமோ டீல் வைத்துச்செயற்படவில்லை, பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைப்பதே எமது இலக்காகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் அரசுடன் 'டீல்' வைத்துள்ளார்கள். இவர்கள் மக்கள் மத்தியில் அரசை விமர்சித்துக் கொண்டு பொதுத்தேர்தலுக்குப் பின்னர் அரசுடன் இணைந்துகொள்ளவே முயற்சிக்கிறார்கள் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

தயாசிறியின் இந்தக் கருத்துக்குப் பதில் வழங்கும்போதே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுத் தேர்தலையொட்டி நாட்டு மக்கள் எமது கட்சியின் பின்னால் அணிதிரண்டு வருகின்றார்கள். இந்தநிலையில், எமது கட்சியின் வாக்கு வங்கியைச் சிதறடிப்பதில் ஐக்கியக் தேசியக் கட்சியினரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினரும் குறியாக உள்ளனர்.

இவ்விரு கட்சிகளும் பல வழிகளில் 'டீல்' வைத்துச் செயற்பட்டு வருகின்றனர். எமது கட்சியின் வாக்கு வங்கியை உடைப்பதற்காகவும் இவர்கள் 'டீல்' வைத்து பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் இந்தச் சதிக்குள் நாம் சிக்கமாட்டோம். நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னாலே நிற்கின்றார்கள். பொதுத்தேர்தல் வெற்றி இதைப் பறைசாற்றும் - என்றார்.

## புத்த மதத்தை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்துகொள்ளலாம் என்று தெளிவாகக் கூறி வைக்கின்றோம் என்று அவர் தனது கடிதத்தில் தீர்க்கமாகத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கமால் குணரத்தினம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் செயலணியில் உள்ள அனைவருமே சிங்களவர்கள்.

இந்த நிலையிலேயே சம்பந்தன் இது தொடர்பில் அரச தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தின் தொடக்கத்தில் 5 விடயங்களைச் சம்பந்தர் வலியுறுத்தியிருக்கிறார்.

1. இலங்கை பல் இன, பல மத, பல மொழி, பல பண்பாட்டுப் பன்மைத்துவம் கொண்ட சமூகம்,

2. இலங்கையில் 9 மாகாணங்கள் உள்ளன, கிழக்கு அவற்றில் ஒன்று,

3. கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள்தான் பெரும்பான்மையானவர்களாக இருந்தபோதும் இது ஒரு பல் இன மக்கள் வாழும் மாகாணம்.

4. இந்தச் செயலணி முற்றிலும் சிங்களவர்களால் கட்டமைக்கப்பட்டுள்ளது, அதன் உருவாக்கப் போக்கு ஒரு விடயத்தை மிகத் தெளிவாக்குகின்றது, அதாவது இந்தச் செயலணி ஒரேயொரு இனத்திற்கு - சிங்கள இனத்திற்கு, அதுபோன்று ஒரேயொரு மதத்திற்கு - புத்த மதத்திற்கு சேவையாற்றும் விருப்பத்துடன் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது.

5. இது, ஏன் மற்றைய மாகாணங்கள் விடுவிக்கப்பட்டன, ஏன் மற்றைய மதங்கள், மற்றைய சமூகங்கள் விடுபட்டனஎன்ற என்ற கேள்வியை எழுப்புகின்றது.

- இவையே அவர் தொடக்கத்திலேயே வலியுறத்தியுள்ள விடயங்கள்.

இலங்கைத் தமிழன் என்ற வகையிலும் ஓர் இந்து என்ற வகையிலும் இது தனக்குக் கவலையளிப்பதாக இருக்கின்றது என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சந்திரிகாவின் பகல் கனவு

"அதிகார வெறித்தனத்திலும் பதவி ஆசையிலும் இருப்பவர்களுக்கு எதிராக மங்கள சமரவீரவுடன் இணைந்து அதிரடி ஆட்டம் காட்ட நான் தயாராக இருக்கின்றேன்" இந்தச் சாரப்பட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அவரது இந்தப் பேச்சு 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதை' போன்றதுதான். அல்லது 'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது' போன்ற நடவடிக்கைதான்.

கிடைத்த சந்தர்ப்பங்களைக் கோட்டை விட்டு, எல்லாவற்றையும் குட்டிச் சுவராக்கி விட்டு, இப்போது ஞானம் பிறந்தவராக சந்திரிகா அம்மையார் பேசுவது அர்த்தமற்றது.

எல்லா நாடுகளிலும் ஜனநாயகத் தலைவர்கள் அவ்வப்போது தோற்றம் பெறுகின்றார்கள். எழுச்சி கொள்கின்றார்கள். சில சமயங்களில் நேரத்துடன் – அப்படி இல்லாவிட்டால் தமது வாழ்க்கைக் காலம் வரை – அவர்களின் செல்வாக்குத் தொடர்கின்றது. அத்துடன் அவர்கள் வரலாறாகி விடுகின்றார்கள்.

காலங்கடந்தும் செல்வாக்குச் செலுத்தும் – மக்கள் மனங்களில் கோலோச்சும் – தலைவர்கள் வெகு சிலரே.

எல்லோராலும் மகாத்மா காந்தியைப் போல, எம்.ஜி.ஆரைப் போல மக்கள் மனங்களில் நீங்கா இடம்பிடிக்க முடிவதேயில்லை.

அப்படி ஆணித்தரமான ஆளுமையைக் கொண்ட தலைவர்கள் அரசியலில் மீளெழுச்சி பெற முடியும்.

சந்திரிகாவும், மங்களவும் அவ்வளவு தூரம் மக்கள் மனதை ஆகர்ஷிக்கும் வலிமை, செல்வாக்குக் கொண்ட தலைவர்களே அல்லர்.

மங்களவுக்கு வேண்டுமானால் அவரது சொந்த இடமான மாத்தறை மாவட்டத்தில் இன்னும் ஓரளவு கணிசமான செல்வாக்கு இருக்கக் கூடும்.

ஆனால் சந்திரிகா குமாரதுங்கவுக்கு அவரது அத்தனகல்ல தொகுதியிலாவது செல்வாக்கு – மக்கள் ஆதரவு – பெரும் எழுச்சியாக இருக்கும் என்று நம்புவதற்கு இடமில்லை.

சுமார் பதினேழு ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான – ஜே.ஆர்., பிரேமதாஸா, டி.பி.விஜேதுங்க அரசுகள் – தமிழர் தாயகத்தின் மீது தொடர்ந்து தொடுத்த கடுமையான போரில் நாடே சிக்கித் திணறிப் பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருந்தபோது –

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திப் போருக்கு முடிவு கட்டி, அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வருவேன் என்று பெரும் பரப்புரை எழுச்சியை உருவாக்கித்தான் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி 1994 இல் அதிகாரத்துக்கு வந்தார் சந்திரிகா குமாரதுங்க அம்மையார்.

சமாதான தேவதை தோற்றத்துடன் ஆட்சிப் பீடத்துக்கு வந்தவர் பின்னர் கொடூரப் போர் வெறி சூர்ப்பனகையாகத் தம்மை வெளிப்படுத்தி நின்றார்.

தமிழர் தாயகம் மீது மிகக் கொடூரமான போரைக் கட்டவிழ்த்து விட்டு, தமிழர் தேசமும், சிங்களவர் தேசமும் மீளிணைய முடியாத முரணிலைக்கு நிரந்தர வித்திட்ட காலமாக அவரது ஆட்சி அமைந்தது.

இரண்டாயிரமாம் ஆண்டில் புதிய அரசமைப்பு முயற்சி மூலம் தமிழருக்கு ஓரளவு சகாயம் செய்ய இணங்குபவராக அவர் தம்மைக் காட்டிக் கொண்டாலும் கூட, அந்த முயற்சி அப்போதைய எதிரணியால் முறியடிக்கப்பட்டதால் ஏற்பட்ட வெஞ்சினம் காரணமாக, 2002 – 2004 க்கு இடைப்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளோடு அப்போதைய ரணில் அரசு முன்னெடுத்த அமைதி முயற்சியை – சமாதான எத்தனத்தை – நிலை பெற அனுமதிக்காது, தமது ஜனாதிபதி அதிகாரத்தைப் பிரயோகித்துக் குழப்பியதன் மூலம் பழிதீர்த்தார்.

அதன் பின்னர் 2005 கடைசியில் இருந்து 2004 இறுதி வரைத் தொடர்ந்த ராஜபக்ஷக்களின் இருண்ட யுக ஆட்சியின் போது ஏதும் செய்ய வகையற்று ஒதுங்கி இருந்த சந்திரிகா மீண்டும் 2015 ஆட்சி மாற்றத்துக்கு ஓரளவு பங்களித்தார். ஆனாலும் கூட அந்த முயற்சியை வெற்றிகரமாக நகர்த்தி இறுதித் தீர்வு கிட்டும் எத்தனத்தில் சம்பந்தப்படாமல், பட்டும் படாமலும் தூரத் தள்ளி, விலகியே நின்றார் அவர்.

அவர் அதிகார பீடத்தில் இருந்து விலகிப் பதினான்கு ஆண்டுகள் கழிந்து விட்டன. வனவாச காலம் முடிந்து மீண்டும் அதிகாரத்தைப் பிடிப்பதற்கு சந்திரிகா அம்மையார் ஒன்றும் இராமபிரான் அல்லர்.

இலங்கையைப் பொறுத்தவரை சந்திரிகா ஒரு செலவழித்த சக்தி – Spent Force. இலங்கை அரசியலில் அவர் மீண்டும் ஆட்டம் காட்டுவது என்பது வெறும் பகல் கனவுதான்.

அதுவும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் விஸ்வரூபமாகக் கிளர்ந்தெழுந்து நிற்கும் ராஜபக்ஷக்களின் எழுச்சிக்கு முன்னால் 'சந்திரிகா மந்திரம்' அடங்கிப் போன பெட்டிப் பாம்புதான்.!

# முன்னிலை சோசலிசக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார்!

## அனுரகுமார திஸாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

**மக்களின் ஜனநாயக உரிமையை வென்றெடுத்து கொடுப்பதற்காக மாத்திரமல்ல, ஏகாதிபத்தியத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் முன்னிலை சோசலிசக் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**



ஏற்கனவே பல் வேறு சக்திகளுடன் இணைந்து செயற்பட தமது கட்சி ஆரம்பித்துள்ளதாகவும், தேசிய மக்கள் சக்தி அமைப்பு அப்படியான தொரு அமைப்பே எனவும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து விலகிச் சென்றவர்கள் என்றாலும் அந்தக் கடந்த காலத்தை மறந்துவிட்டு முன்னிலை சோசலி சக் கட்சியுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாகவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார்.

குமார் குணரட்னம் தலைமையிலான முன்னிலை சோசலிசக் கட்சியினர் மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகித்தது டன் அந்த முன்னணிக்குள் ஏற்பட்ட கொள்கை ரீதியாக முரண்பாடுகள் காரணமாக அதில் இருந்து விலகி முன்னிலை சோசலிசக் கட்சியை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# 100 முன்னாள் எம்.பிக்களிடம் மதுபான விற்பனை உரிமம்

## ரஞ்சன் ராமநாயக்க தகவல்

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதிநிதிகளில் மதுபான விற்பனை நிலையங்களுக்கான உரிமங்களைப் பெற்றிருந்த 100 பேர், இலங்கைக்குப் போதைப் பொருளைக் கடத்தி வரும் இரண்டு பேர், ரயில்களில் தங்கச் சங்கிலியைப் பறித்த ஒருவர் எனப் பலர் இருந்தனர் என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பிரசாரக்கூட்டம் ஒன்றில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றத்தில் மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற 100 பேர், மணல் அகழும் அனுமதியைப் பெற்ற 75 பேர், போதைப்பொருளை கடத்தி வரும் இரண்டு பேர், குதிரைப் பந்தயம் நடத்தும் ஒருவரும் இருந்தனர்.

ரயில்களில் சங்கிலி பறித்த ஒருவரும் இருந்தார். இதுவே நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்களின் தகுதி. இவ்வாறான நிலைமையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோருகின்றனர்.

அதிகாரம் இல்லாதபோதே இவர்கள் இப்படி செய்தால், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கினால் என்ன நடக்கும்? – என்றார்.

## புத்த மதத்தை காக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனெனில் இந்து மக்கள் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் இருக்கிறார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சம்பந்தரின் இந்தக் கடிதத்தில் இலங்கையின் இந்து மதத்தின் தொன்மை விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 5 ஈஸ்வரங்களின் இருப்புப் பற்றி சிங்கள வரலாற்றுப் பேராசிரியரான பி.ஈ.பீரிஸை மேற்கோள்காட்டி நீண்ட விளக்கங்களைக் கொடுத்திருக்கும் சம்பந்தர், இலங்கையில் சிங்களவர்களின் மூதாதையரான விஜயனின் வருகைக்கு முன்பே இந்து மதம் இங்கிருந்தது என்று நிரூபிக்க விழைகின்றார்.

அத்தோடு, இலங்கை இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுபட்டதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் எவ்வாறு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதையும் விவரித்துள்ளார்.

ஒரு கட்டத்தில் 1981ஆம் ஆண்டுக்கு முன்பான மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களை ஆதாரமாகக் கொண்டு கிழக்கில் திட்டமிட்டு சிங்களக் குடிப் பெருக்கம் செய்யப்பட்டமையை நிரூபிக்கிறார்.

1947ஆம் ஆண்டுக்கும் 1981ஆம் ஆண்டுக்கும் இடையில் நாட்டின் சனத் தொகை வளர்ச்சியில் சிங்களவர்களின் வளர்ச்சி 238 சதவீதமாக இருக்கும் போது, கிழக்கு மாகாணத்தில் அவர்களின் வளர்ச்சி 883 சதவீதமாக இருக்கின்றது.

அந்தக் காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களின் வளர்ச்சி வீதம் 549.73 சதவீதமாக இருக்கின்றது. இதுவே அம்பாறை மாவட்டத்தில் 1250 சதவீதமாக இருக்கின்றது என்று தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார் சம்பந்தன்.

"வடக்கு கிழக்குக்கு வெளியே இருந்து சிங்களவர்களை அழைத்து வந்து கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டுக் குடியேற்றியதனால் ஏற்பட்டது" என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கிழக்கில் உள்ள விகாரைகள் சிலவற்றில் தமிழ்க் கல்வெட்டுக்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள சம்பந்தர், இவை வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழர்களும் புத்த மதத்தை பின்பற்றியவர்கள் என்பதற்கான சான்று என்பதைக் கூறி, இத்தகைய தகவல்களை அனைத்து மக்களும் அறிந்துகொள்ளும்படி பகிரங்கப்படுத்தி இலங்கைத் தொல்லியல் துறையினர் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தொல்லியல் துறை என்பது துரதிர்ஷ்ட வசமாக ஒரு மதத்தை மட்டும் மேன்மைப்படுத்தும் வகையிலேயே செயற்படுகின்றது என்றும் அவர் சாடியுள்ளார். கிழக்கில் புத்த விகாரைகள் மிக நீண்ட காலங்களாக இருக்கின்ற, அவற்றுத் தேவையான நிலமும் உள்ளது என்று சுட்டிக்காட்டியிருக்கும் சம்பந்தர், எனவே புதிய செயலணி அந்த நிலத்திற்கு மேலதிகமாக எந்தவொரு இடத்தையும் தொல்லியல் இடமாகச் சுவீகரிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

"புத்த மதத்தின் பாதுகாப்பு, நிலைப்படுத்தல் மற்றும் மேன்மைப்படுத்தலுக்கு யாரும் எதிரானவர்கள் அல்லர். யாராவது புத்த மத இடங்களையோ, டிட்ட சட்டத்திற்குப் புறம்பாக ஏதாவது செய்தார்களானால் அவர்களுக்கு எதிராகக் கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஏற்கனவே உள்ள சட்டம் ஒழுங்கு துறையினர் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

புத்த மதத்தின் நோக்கத்திற்காக போதுமானளவு இடங்களில் விகாரைகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் உள்ளன. நூற்றாண்டுகளாக அவை அங்கு உள்ளன. எனவே அந்த நோக்கத்திற்காக மேலதிக நிலம் எதுவும் தேவையில்லை. இந்தப் பகுதியை புத்த சிங்கள இடமாக மாற்றுவதற்கு ஆசைப்படுபவர்களுக்கே மேலதிக நிலம் தேவைப்படுகின்றது.

இவ்வாறு சிங்களவர்களைக் குடியேற்றுவது தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் தற்போதைய மற்றும் எதிர்கால வாழ்வுரிமையைப் பாதிக்கும் செயல்" என்றும் சம்பந்தன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தனது கடிதத்தை கவனத்தில் எடுத்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படியும் அரச தலைவரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# முப்படைகளும் தயார் நிலையில்!



லடாக் எல்லையில் இந்தியா - சீனா இராணுவத்தினர் இடையே மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து எல்லையில் இந்தியத் தரப்பில் முப்படைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

லடாக்கின் கிழக்கே கல்வான் பள்ளத்தாக்குப் பகுதியில் கடந்த 15ஆம் திகதி இரவு இந்தியா-சீனா இராணுவத்தினருக்கு இடையே நடந்த மோதலில் இந்தியச் சிப்பாய்கள் 20 பேர் கொல்லப்பட்டனர். இந்தியா, சீனா இடையே கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நடந்துள்ள மிகப்பெரிய இந்த மோதலால் எல்லையில் கடுமையான பதற்றம் நிலவி வருகிறது.

அங்கு அமைதியை ஏற்படுத்த இருநாடுகளும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதேநேரம் எல்லையில் இராணுவத்தைக் குவித்து வருகிறது இந்தியா. இந்திய முப்படைகளின் தலைவர் பிபின் ராவத், முப்படைத் தளபதிகள் ஆகியோருடன் இராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார்.

இதில் முப்படைகளையும் தயார் நிலையில் வைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி இந்தியா - சீனா எல்லை முழுதும் படைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. மோதல் நடைபெற்ற பகுதியில் இந்தோ - திபெத் படைகளைத் தயார் நிலையில் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. சீனாவுடனான எல்லைப்பகுதிகளை விழிப்புடன் கண்காணிக்குமாறு முன்வரிசை விமானப்படைத் தளங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்திய பெருங்கடல் பகுதியில் சீன போர்க்கப்பல்கள் நடமாடுவதைக் கண்காணிப்பதற்குக் கடற்படைக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

## குடும்பக் கட்டுப்பாடு நீக்கம்!

ஈரானில் நடைமுறையில் இருந்த குடும்பக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. ஈரான் மருத்துவமனைகளில் குடும்பக்கட்டுப்பாடு செய்வதற்கான சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மக்கள்தொகையை அதிகரிக்கும் முயற்சியாக இது கருதப்படுகிறது.

உடல்நிலையில் பாதிப்பு அல்லது ஆபத்து உள்ள பெண்களுக்கு மட்டுமே கருத்தடை மருந்துகள் வழங்கப்படும். நிரந்தரக் கருத்தடைக்காக ஆண்களுக்கு மேற்கொள்ளப்படும் 'வாஸெக்டோமி' என்ற அறுவைச் சிகிச்சையும் இனி மேற்கொள்ளப்படாது.

குறைவான பிறப்பு விகிதம் மற்றும் பெருகிவரும் முதியவர்களின் தொகை காரணமாக இந்த நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது. நிறையக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 8 கோடி மக்கள் தொகையை 15 கோடியாக அதிகரிக்க வேண்டும் என ஈரானின் அதிஉயர்தலைவர் அயதுல்லா அலி கமேனி தெரிவித்துள்ளார்.



## யோகா தினத்தையொட்டி இந்திப் பிரதமர் உரை

சர்வதேச யோகா தினமான எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதியன்று இந்தியப் பிரதமர் மோடி இந்திய மக்களுக்கு உரையாற்றவுள்ளார். இது இந்திய அரச தொலைகாட்சியான தூர்தர்ஷன் மற்றும் பிற தளங்களில் இந்திய நேரப்படி காலை 6.30 மணிக்கு ஒளிபரப்பப்படும்.

மோடியின் பரிந்துரையை ஏற்று 2015ஆம் ஆண்டு ஐ.நா. ஜூன் 21ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அறிவித்தது. அன்றிலிருந்து இந்தியாவின் பல்வேறு யோகா நிகழ்ச்சிகளில் மோடி பங்கேற்று வருகிறார். தான் யோகாசனம் செய்கின்ற காணொலிகளையும் வெளியிட்டு வருகிறார்.

ஆண்டுதோறும், சர்வதேச யோகா தினத்தன்று யோகாப் பயிற்சியில் கலந்து கொண்டு உரையாற்றி வருகிறார். இந்நிலையில், எதிர்வரும் ஜூன் 21ஆம் திகதி டெல்லியில் இருந்தப்படி மோடி மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.



பிரிட்டனில் கொரோனாத் தொற்றுக் காரணமாக நிறுத்தப்பட்ட 'பிரிமியர் லீக்' கால்பந்துத் தொடர் மீண்டும் தொடங்கிய போது கால்பந்துவீரர்கள் அனைவரும் முட்டுக் காலில் அமர்ந்திருந்து இனவெறிக்கு எதிரன போராட்டக்காரர்களுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தனர். அத்துடன் அனைவரும் 'பிளொக் லிவ்ஸ் மேட்டர்' என்ற ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்ட மேற் சட்டைகளை அணிந்திருந்தனர்.

## மது பானம் நிறுத்தம்


கொரோனா அச்சம் காரணமாக, விமானங்களில் பயணிகளுக்கு மது பானம் வழங்குவதைப் பல்வேறு விமான நிறுவனங்கள் நிறுத்தி உள்ளன.

ஐரோப்பாவில் ஈசிஜெட், கே.எல்.எம், அமெரிக்காவில் டெல்டா எயார் லைன்ஸ், அமெரிக்கன் எயார் லைன்ஸ், ஆசியாவின் விர்ஜின் ஆஸ்திரேலியா உள்ளிட்ட விமான நிறுவனங்கள், தங்கள் பயணிகளின் நலன் மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதிசெய்யவும், நோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கையாகவும், பயணிகளுக்கு மதுபானம் வழங்குவதை நிறுத்தி உள்ளன.

பயணிகளுக்கும், விமான ஊழியர்களுக்கும் இடையிலான தொடர்பை குறைக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக உணவு மற்றும் பானங்கள் வழங்குவதிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

# தேர்தலில் வெல்ல சீனாவின் உதவியை நாடினார் ட்ரம்ப்!

### ஜோன் போல்டன் பரபரப்புக் குற்றச்சாட்டு



அமெரிக்காவில் நடக்கவிருக்கின்ற அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றிபெறுவதற்குச் சீன அதிபரின் உதவியை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நாடினார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தேர்தலில் மீண்டும் வெற்றிபெறுவதற்குச் சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் உதவியை டொனால்ட் ட்ரம்ப் நாடினார், என அமெரிக்காவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டன் தெரிவித்துள்ளார்.

'ஒரு வெள்ளை மாளிகை நினைவுகள்' என்ற தலைப்பில் அவர் எழுதிய புத்தகத்திலேயே ஜோன் போல்டன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புத்தகம் அடுத்த வாரம் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவுள்ளது. வால் ஸ்ட்ரீட் ஜேர்னல், நியூயோர்க் ரைம்ஸ் மற்றும் வொஹிங்டன் போஸ்ட் ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ள குறித்த புத்தகத்தின் ஒரு பகுதியில் இருந்தே இந்தத் தகவல் தெரியவந்தது.

சீன அதிபர் ஜி ஜின்பிங்கிடம் தனிப்பட்ட முறையில் 2020 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற உதவுமாறு ட்ரம்ப் கேட்டுக் கொண்டார் என அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

உய்குர் முஸ்லிம்களைப் பெருமளவில் தடுத்து வைப்பதற்காகச் சீனா வதை முகாம்களைக் கட்டுவதாகக் கடந்த ஆண்டு ட்ரம்பிடம் கூறியபோது, அந்த முகாம்களைக் கட்டியெழுப்பி முன் செல்ல வேண்டும் என்று ட்ரம்ப் கூறினார் எனவும் மேலும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# படைகளைக் குவிப்போம் மிரட்டுகிறது வடகொரியா

தென்கொரியா - வடகொரியாவுக்கு இடைப்பட்ட இராணுவம் விலக்கு அளிக்கப்பட்ட பகுதியில் தமது படைகளைக் குவிப்போம் என வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது. இதனால் கொரியத்தீபகற்பத்தில் போர் மேகம் சூழ்ந்துள்ளது.

கொரியத் தீபகற்பத்தில் வடக்கு மற்றும் தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வருகிறது. தென் கொரியாவுடனான தொடர்புகளைத் துண்டித்த வடகொரியா இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவை மேம்படுத்த 2018 ஆம் ஆண்டு வடகொரியாவின் ஹேசாங் நகரில் கட்டப்பட்ட கொரியத் தகவல் தொடர்புக் கட்டடத்தையும் தகர்த்தது.

இதனால், வட மற்றும் தென்கொரியா இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது. அந்தக் கட்டடம் அமைந்திருந்த இராணுவ விலக்கப்பட்ட பகுதியில் படைகளைக் குவிக்கப்போவதாக வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும், அங்கு இராணுவச் சோதனைச் சாவடிகளை அமைக்கப்போவதாகவும் மிரட்டல் விடுத்துள்ளது.



# மோதலில் இறந்த தமிழகச் சிப்பாய் 21 குண்டுகள் முழங்க நல்லடக்கம்





இந்தியா - சீனா இராணுவத்துக்கு இடையே எல்லையில் நடந்த மோதலில் இறந்த தமிழகத்தின் ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டம் கடுக்கலூரைச் சேர்ந்த சிப்பாய் பழனியின் பூதவுடல் 21 குண்டுகள் முழங்க நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது சொந்த ஊரில் நேற்றுக் காலை ஏழு மணியளவில் குடும்ப வழக்கப்படி இறுதிச்சடங்கு செய்யப்பட்டுப் பின்னர் இராணுவ மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பழனியின் உடலுக்கு ஏராளமான மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர், ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் அவரது வீட்டின் முன்பாக உறவினர்கள், பொதுமக் கள், பிரமுகர்களின் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டது.


அங்கு இந்திய அரசு சார்பில் அஞ்சலி செலுத்திய மாவட்ட ஆட்சியாளர் வீரராகவ ராவ், தமிழக முதல்வர் அறிவித்த நிதியுதவி ரூ. 20 லட்ச ரூபாய்க்கான காசோலையை (இந்திய மதிப்பில்) பழனியின் குடும்பத்தாரிடம் வழங்கினார். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் வருண்குமார், பரமக்குடி சட்ட மன்ற உறுப்பினர் சதன் பிரபாகரன் உள்ளிட்டோர் பழனியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# வான் கோவின் கடிதம்!

புகழ்பெற்ற மனப்பதிவுவாத ஓவியர்களான வின்சற் வான் கோ மற்றும் பவுள் கயுகுயின் இருவரும் இணைந்து எழுதிய கடிதம் பிரான்சின் பாரிஸில் ஏலத்தில் விற்கப்பட்டது.

இந்தக் கடிதம், அவர்கள் விபசார விடுதிகளுக்கு வருகை தருவதை விவரிக்கிறது. இந்தக் கடிதத்தை வின்சற் வான் கோ அறக்கட்டளை நிறுவனம் வாங்கியது. இந்தக் கலைஞர்கள் தங்கள் நண்பரான பிரெஞ்சு ஓவியர் எமிலி பெர்னார்ட்டுக்கு 1888இன் பிற்பகுதியில் எழுதிய கடிதம் இது என்று தெரிவிக்கப்படுகிறது.

1888 நவம்பர் 1 - 2 திகதியிட்ட மற்றும் கையொப்பமிடப்பட்ட இந்தக் கடிதம் வான் கோவுக்கு மன முறிவு ஏற்பட்டுப் பல வாரங்களுக்கு முன்பு அவரது இடது காதை அவர் வெட்டியபோது எழுதப்பட்டது. வான் கோ எழுதிய மிக முக்கியமான ஆவணம் இதுஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மர்ம முட்டைக்கு கிடைத்தது விடை



10 பத்து வருடங்களுக்கு முன்னர் அந்தாட்டிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட கால்பந்து அளவிலான முட்டை குறித்த மர்மத்துக்கு அமெரிக்க விஞ்ஞானிகள் விடை கண்டறிந்துள்ளனர்.

காற்று வெளியேறிய கால்பந்து போன்ற வடிவில் கிடைத்த அந்த முட்டைப் படிமம் குறித்துப் பல வருடங்களாக அறிய முடியாமல் ஆராய்ச்சியாளர்கள் திணறினர். 68 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பெரிய கடல் ஊர்வன உயிரினத்தின் முட்டையாக அது இருக்கலாம் என்று தற்போது ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இதுவே உலகின் மிகப்பெரிய ஊர்வன உயிரினத்தின் முட்டை என நம்பப்படுகிறது. இந்த 'மர்ம முட்டை' சிலி நாட்டில் 2011ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. இருப்பினும், 2018ஆம் ஆண்டில்தான் இது காற்று வெளியேறிய ஒரு முட்டை என்பது கண்டறியப்பட்டது. இந்த முட்டையை ஈன்ற உயிரினம் சுமார் 7 மீற்றர் நீளமுடையதாக இருந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# பாதுகாப்புச் சபையில் இந்தியா 2 ஆண்டுகளுக்கு உறுப்பினர்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமில்லாத உறுப்பினர் நாடுகளுக்கு நேற்று நடந்த தேர்தலில் இந் திய 193 வாக்குகளில் 184 வாக்குகள் பெற்று அதற்குத் தெரிவாகியது.

இதன் மூலம் பாதுகாப்புச் சபையில் உள்ள நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் 10 நிரந்தரமில்லாத உறுப்பு நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம் பிடித்துள்ளது.

5 நாடுகள் தெரிவுக்கென நடந்த இந்தத் தேர்தலில் இந்தியாவுடன் சேர்ந்து, அயர்லாந்து, மெக்சிக்கோ, நோர்வே ஆகிய நாடுகளும் தெரிவாகின.

கனடா இந்தத் தேர்தலில் தோல்வியடைந்தது. இதன்படி 2021 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகளுக்கு இந்தியா இந்தப் பதவியில் இருக்கும்.

# காதல் வலைவீசி மோசடி!

காதல் வலைவீசி சுமார் 6 மில்லியன் டொலர் இணைய மோசடியில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து நைஜீரிய நாட்டைச்சேர்ந்த 6பேரின் சொத்துக்களை முடக்கியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

அமெரிக்காவைச்சேர்ந்த தனிநபர்களையும் சிறு வணிகர்களையும் காதல் மோசடியிலும் வணிக நிர்வாகிகளைப் போல ஆள்மாறாட்டம் செய்தும் இவர்கள் குறிவைத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. சட்ட விரோத பணப் பரிமாற்றங்களைப் பெற்ற தாகவும், பாதிக்கப்பட்டவர்களின் பயனர்பெயர்கள், கடவுச்சொல் மற்றும் வங்கி விவரங்களை அணுகுவதற்கு முயற்சித்ததாகவும் மேற்படி 6 பேர் மீதும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

காதல் மோசடிகளில் பாதிக்கப்பட்டவர்கள் மின்னஞ்சல்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் குறிவைக்கப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் பெண்கள், முதியவர்கள் மற்றும் வாழ்க்கைத் துணையை இழந்தவர்கள் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

சந்தேக நபர்கள் இருக்கும் இடம் தெரியவில்லை, ஆனால் அதிகாரிகள் அமெரிக்காவில் உள்ள அவர்களின் சொத்து மற்றும் நலன்கள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். கறுப்பினத்தவர் - இனப்பாகுபாடு விவகாரம் குறித்த போராட்டங்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்தச்சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது

## எல்லை மோதலின் எதிரொலி

# சீனப் பொருள்களை புறக்கணிப்போம் இந்தியர்கள் ஒன்றிணைந்து கோசம்!

எல்லையில் சீனா- இந்தியா இராணுவத்தினர் கைகலப்பில் ஈடுபட்டு உயிரிழந்த நிலையில் சீனப் பொருள்களைப் புறக்கணிக்குமாறு கோரியுள்ளது அகில இந்திய வர்த்தகர்களின் கூட்டமைப்பு.

அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் 13 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான சீன இறக்குமதிப் பொருள்களைக் குறைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் என்றும் அந்தக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.



தற்போதைய சூழலில் இந்தியா ஆண்டொன்றிற்குச் சுமார் 5.25 கோடி மதிப்பிலான சீனப் பொருள்களை இறக்குமதி செய்கிறது. அத்தோடு சீன உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று 'பி.எஸ்.என்.எல்.' நிறுவனத்துக்குக் கூற மத்திய அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுக்குச்சொந்தமானபி.எஸ்.என்.எல். தொலைத் தொடர்புத் துறை நிறுவனம் சீன உபகரணங்களுக்கு 4ஜி மேம்படுத்துவதை நிராகரிக்க முடிவு செய்துள்ளது. பாதுகாப்புப் பிரச்சினைகள் இருப்பதால் சீன உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று 'பி.எஸ்.என்.எல்' நிறுவனத்திற்குக் கூற மத்திய அமைச்சகம் முடிவு செய்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. எல்லைப் பதற்றத்தைத் தொடர்ந்து இந்தியார்கள் மத்தியில் சீனாவுக்கு எதிரான கோசங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மொட்டைப் போல உருவானதே ஐக்கிய மக்கள் சக்திக் கட்சியும்

## இப்படிச் சொல்கிறார் இராதாகிருஷ்ணன்



சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மைத்திரிபால சிறிசேன இல்லாது செய்ததால் மொட்டுக் கட்சி உருவானது. அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாது செய்ய ரணில் முயற்சிப்பதால் ஐக்கிய மக்கள் சக்தி உருவானது.

இவ்வாறு தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன்.

தலவாக்கலையில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாவட்டத்தில் உள்ளவர்கள் ஐக்கியமக்கள் சக்திக்கே வாக்களிக்கவேண்டும். அதிலும் வெற்றிபெறக்கூடிய வேட்பாளர்கள் யாரென இனங்கண்டு அவர்களை ஆதரிக்கவேண்டும். தனித்து பயணித்தால் சாதிக்கமுடியாது. சமூகத்தின் நலன்கருதியே தமிழ் முற்போக்கு கூட்டணியாக நாம் பயணிக்கின்றோம்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்குள் இன்று பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தத் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்கள் எம்மை ஆதரிக்க நினைக்கின்றனர்.

அவர்களையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அங்கத்தவர்கள் வந்தால் அவர்களையும் அரவணைத்துக்கொண்டே நாம் பயணிக்கவேண்டும்.

இதேவேளை, மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியை இல்லாது செய்ததாலேயே மொட்டுக் கட்சி உருவானது. அதேபோல் ரணில் விக்ரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாது செய்ய முற்படுவதாலேயே சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி உருவானது. நாமும் அந்தக் கூட்டணியிலேயே இருக்கின்றோம். மக்கள் அந்தக் கூட்டணியையே ஆதரிக்க வேண்டும் - என்றார்.

# கிளிநொச்சியிலும் 30 இளைஞர்கள் 12ஆம் திகதி கைதாகி மறியலில்

## ஆவா குழுவினர் என்கிறது பொலிஸ்

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தை அண்டிய இடத்தில் பிறந்த நாள் கொண்டாடிய 30 இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆவா வன்முறைக் கும்பலின் நிறுவுனர்களில் ஒருவரான தற்போது பிரான்ஸில் வசித்துவரும் சன்னா என்பவரின் பிறந்தநாளை இந்த இளைஞர்கள் கேக் வெட்டிக் கொண்டாடியபோது கைது செய்யப்பட்டனர்என்று பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

'சன்னா' எனப்பெயர்பொறிக்கப்பட்டு, கோடரியின் உருவமும் பொறிக்கப்பட்ட கேக்கை அவர்கள் வெட்டினர். இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டம் தொடர்பாகத் தகவல் கிடைத்த பொலிஸார் அந்த இடத்திற்குச் சென்று அங்கிருந்த இளைஞர்கள் 30 பேரையும் கைது செய்தனர்.

அவர்களை மறுநாள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தினர் பொலிஸார். 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதே ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டும் 26 பேர் யாழ். மாவட்டம் சுன்னாகத்தில் ஆள்கற்ற வீட்டில் ஒன்றுகூடிய போது கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் முல்லைத்தீவில் இருந்தும் வந்தே இவர்கள் அங்கு ஒன்றுகூடினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் சிறுவர்களான இருவர் பிணையில் விடுவிக்கப்பட்ட மற்றைய 24 பேரும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

# எஸ்.பியின் கூற்றை மறுக்கும் சங்கக்கார

நுவரெலியா - கொல்ப் திடல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவின் கூற்றை குமார சங்கக்கார மறுத்துள்ளார்.

விளையாட்டுச் சுற்றுலாத் துறை என்ற அடிப்படையில் நுவரெலியா கொல்ப் திடலுடன் இணைந்துள்ள காணி ஒன்றையே சுற்றுலா விருந்தோம்பல் திட்டம் ஒன்றுக்காகத் தாம் கேட்டார் என அவர் குறிப்பிட்டார்.

எஸ்.பி.திசாநாயக்க கூறிய தைப்போன்று 300 ஏக்கரைக் கொண்ட நுவரெலியா கொல்ப் திடலை தாம் முழுமையாகக் கேட்கவில்லை. அந்தத் திடல் அதன் உறுப்பினர்களுக்குச் சொந்தமானது. எனவே அவ்வாறான எண்ணம் தமது மனதில் எழவில்லை என்றும் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனை தொடர்பில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரே தம்மிடம் கேட்கப்பட்டதாகவும் குமாரசங்கக்கார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று செய்தியாளர்களிடம் கருத்துரைத்திருந்த எஸ்.பி. திசாநாயக்க நுவரெலியா கொல்ப் திடலை 20 வருடங்களுக்கு தந்தால், வருடம் ஒன்றுக்கு 10 லட்சம் கொல்ப் வீரர்களை இலங்கைக்கு வரவழைக்கமுடியும் என்று குமார சங்கக்கார தம்மிடம் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir
காலைக்கதிர்


தினம் ஒரு தலைப்பு
சித்திரப்போட்டி
நாளைய (20.06.2020) தலைப்பு
காலைக்கதிர்
ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கறுப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.
சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# நல்லூரில் நேற்று கைதான இளைஞர்களுக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 18

நல்லூரில் நேற்றிரவு கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 16 பேருக்கும் யாழ். நீதிவான் ஏ. பீற்றர் போல் இன்று மாலை பிணை வழங்கினார்.

நல்லூர் முருகன் ஆலயத்தின் பின்புறமாக, றியோ கிறீம் ஹவுஸின் முன்னுள்ள வெளியில் கூடியிருந்த இந்த இளைஞர்களை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இன்று மாலை 4 மணி அளவில் அவர்கள் அனைவரும் நீதிவான் முன் நிறுத்தப்பட்டனர்.

கொரோனா பெருந் தொற்றுக் காலத்தில் சுகாதார விதிகளை மீறி ஒன்றுகூடியமை காரணமாகவும் இவ்வாறு இளைஞர்கள் கூட்டமாகக் கூடிய பின்னரே வாள்வெட்டில் ஈடுபடுகின்ற வழமை என்பதாலும் சந்தேகத்தில் இவர்களைத் தாம் கைது செய்தனர் என்று காவல்துறையினர் சார்பில் மன்றில் முற்பட்டிருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ நீதிமன்றில் தெரிவித்தார்.

ஆனால், இவர்கள் அனைவரும் வேட்பாளர் ஒருவரின் அழைப்பின் பேரில் தேர்தல் நடவடிக்கைக்காகவே அந்த இடத்தில் கூடியிருந்தனர் என்று சட்டத்தரணி சிறீ காந்தா நீதிவானிடம் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எந்தத் தடைகளும் இல்லை என்றாலும் கொரோனா பெருந் தொற்றுக் காலத்தில் சுகாதார விதி முறைகளை முழுமையாகப் பின்பற்றுவது அவசியம் என்றும் அறிவுறுத்தினார்.

பின்னர் இளைஞர்கள் ஒவ்வொருவரும் தலா ஒரு லட்சம் ரூபாய் கொண்ட இரு சரீரப் பிணைகளில் செல்ல நீதிவான் அனுமதித்தார். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் கௌதமன், நிசாந்தன், வினோத் ஆகியோரும் மன்றில் முற்பட்டிருந்தனர்.

# டுபாயிலிருந்து 290 இலங்கையர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக டுபாய் நாட்டில் சிக்கித் தவித்த 290 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் இன்று வியாழக்கிழமை காலை 5.35 மணியளவில் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதனையடுத்து, கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவர்களுக்கு பயணிகள் சுகாதார அதிகாரிகளால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்களை விமான நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள 4 ஹோட்டல்களில் தற்காலிகமாக தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவர்களில் கணிசமான எண்ணிக்கை கர்ப்பிணி தாய்மார்களும் அடங்குகின்றனர் என்று ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரி வித்தார்.

இதேவேளை, மடகஸ்கார், உகண்டா மற்றும் இந்தியாவிலிருந்தும் மேலும் சிலர் எதிர்வரும் வாரத்தில் நாடு திரும்பவுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

# வடக்கின் கல்வி வளர்ச்சி?

பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன்





2019 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைப்பெறுபேற்று அடிப்படையிலான மாகாணத் தர வரிசையில் வடமாகாணம் கடைசி நிலை என்று சமூக வலைத்தளங்கள் கண்ணீர் வடிக்கின்றன. இதற்கான காரணங்கள், காரணங்களை வேரோடு களைவதற் கான வழிமுறைகளைக் காண்பதை விடுத்து, பெரும் பாலும் புள்ளிவிவரங்களை மட்டும் அடுக்குவதை அவ்வலைத்தளச் செய்திகளில் காணச் சலிப்பேற் படுகிறது. புள்ளிவிவரங்கள் போதாது என்று, கணினி மென்பொருளின் உசாத்துணையில் தயாரான சலாகை வரைபு, வட்ட வரைபு என, ஒரே அமர்க்களம். அந்தப் புள்ளி விவரங்களில் பலவற்றை உபயம் செய்தது பரீட்சைத் திணைக்களம். ஏனைய சிலவோ வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அறுவடை. பாவம், பரீட்சைத் திணைக்களம். பலரைப் பிழிந்து, பெறுபேறுக்களை அடிப்படையாகக் கொண்டு, புள்ளி விவரங்களை, வரைபுகளை வெளியிட்டால், எல்லா எழுத்தர்களும் அவ்வரைபுகளால், இணைய வெளிகளை நிரப்பி, எதிர் காலத்தில் பரீட்சை எடுக்க வுள்ள மாணவர்களை வெருட்டித் தள்ளுகின்றனர்.

### திடீர் அக்கறை

என்றுமில்லாதவாறு இம்முறை வடமாகாணக் கல்விநிலை குறித்து ஒரு திடீர் அக்கறை நம் கல் வியாளர்களிடம் பெருக்கெடுத்திருக்கிறது. அவர்க ளைப் பார்த்து ஒரேயொரு கேள்வி. 'க.பொ.த. சா.த. பெறுபேற்று அடிப்படையிலான மாகாணத் தரவரி சையில், இந்த முறை மட்டும்தானா வடமாகாணம் கடைசிக்கு வந்துள்ளது?' இல்லையே, இது பல்லாண் டுகளாக உள்ள தொடர் நிலைமைதானே.

நீங்கள் அனைவரும் தரவுகளை இறக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தையே பாருங்கள். 2014 இலிருந்து வடமாகாணம் கடை சியாகத்தான் உள்ளது. சென்ற ஆண்டு (2018 பரீட்சை) மட்டும்தான், ஒரு சிறிய முன்னேற்றம். ஆம், வட மாகாணம் கடைசிப் பிள்ளையிலிருந்து கடைசிக்கு முதல் பிள்ளையாக முன்னேறியுள்ளது. ஆனால், அதற்காக மகிழ்ச்சியடைய முடியாது. காரணம் அந்த ஆண்டு கடைசிப்பிள்ளையாக வந்தது நமது சகோதர மாகாணமான கிழக்கு. அதுவும் பெரிய வித்தியாசத்தில் இல்லை. இவ்வாறு கடந்த ஆறேழு ஆண்டுகளாக இம்மாகாணங்கள், தரவரிசையில் கடைசியாகவே தான் நின்றுகொண்டிருக்கின்றன. இந்நிலையில், இந்த ஆண்டு மட்டும் ஏன் இந்தத் திடீர் கரிசனை? இதுவரை இல்லாத அக்கறை? பிறரில் குற்றச்சாட்டு? இதிலே, இனி அடுத்த ஆண்டு இன்னும் கீழிறங்க முடியாத இறுதி நிலை வடக்கு மாகாணத்துக்கு என்ற குத்தல் வேறு.

### கொரோனாவின் கொடுப்பினையே இந்தக் கரிசனை

2014, 15களில் இருந்து கடந்த ஆண்டுவரை வடக்குக் கடைசியாக இருந்தபொழுதெல்லாம் வராத கரிசனை எல்லாருக்கும் இவ்வாண்டு பெருகி எழுந் ததற்கு, உண்மையில் ஒரு நியாயம் உண்டு. அதை, கொரோனாவின் கொடுப்பினை என்றே சொல்ல வேண்டும். இவ்வளவு காலமும் வடமாகாணம் கடை சியாக வந்தபொழுதெல்லாம் அதைப் பார்க்கவே நேரம் இல்லாமல் – அதற்காக ஒரு துளி நிமிடத்தைக் கூட ஒதுக்கிச் சிந்திக்கத் தயாராக இல்லாமல் – ஓடியோடிஉழைத்த நமக்கு, இவ்வாண்டு ஊரடங்கு தாராளமான நேரத்தைத் தந்து விட்டது. வேறு சோலி இல்லை. வேறு பிராக்கு இல்லை. எனவே, மெல்லுவதற்கு வேறொன்றும் கிடையாமல் 'சப்புக்கொட்டிய' எங்கள் வாய்க்கு, இது நல்ல அவல்தான். மென்று தள்ளு கிறோம். அவ்வளவே! இவன் என்ன பொறுப்பே இல்லாமல் பேசுகிறானெனநீங்கள் நினைத் தல் கூடும். நெஞ்சறியச் சொல் லுங்கள், உண்மையில் வடமா காணம் கல்வியில் வளரவே இல்லையா? வளர்கிறதா இல்லையா என்பதை, எதை வைத்துத் தீர்மானிப்பது?

### வளர்ச்சியை எப்படி அறிவது?

ஏனைய மாகாணங்களோடு வடக்கை ஒப்பிடுவ தன் மூலம் வளர்ச்சியை அறியலாமா? இல்லையே. 2015 இலும் அனைத்து மாகாணங்களை விடவும் கடைசியாக வடக்கு வந்தது. 2016 இலும் அவ்வாறே. 2019 இலும் அப்படியே. இந்நிலையில் எப்படி அறி வது வளர்ச்சியை? வடக்கின் முன்னைய ஆண்டுப் பெறுபேறுகளோடு இவ்வாண்டுப் பெறுபேற்றைப் ஒப்பிட்டுப் பார்த்து, அறிவதுதானே வளர்ச்சி.

2015 இல் வடமாகாண மாணவரில் (ஐந்துக்கும் அதிக பாடங்கள் செய்த பாடசாலைப் பரீட்சார்த்தி களில்) உயர்தரத்துக்குத் தகுதி பெற்றவர்கள் 60.38 வீதத்தினர். ஆனால், 2019இல் உயர்தரத்துக்குத்



> 2014, 15களில் இருந்து கடந்த ஆண்டுவரை வடக்குக் கடைசியாக இருந்தபொழுதெல் லாம் வராத கரிசனை எல் லாருக்கும் இவ்வாண்டு பெருகி எழுந்ததற்கு, உண்மையில் ஒரு நியாயம் உண்டு. அதை, கொரோனாவின் கொடுப்பினை என்றே சொல்ல வேண்டும்.

தகுதி பெற்றவர்களோ 67.74 வீதத்தினர். இது வளர்ச்சி இல்லையா? வடமாகாணத்தின் முன்னைய நிலையிலிருந்து அது மெல்ல மெல்ல மேலெழு கிறதா எனப் பாருங்கள். அதுதானே வளர்ச்சி பற்றிய கணிப்பாக இருக்க முடியும்.

### அரசின் கவனிப்பு சரிசமமாக உள்ளதா?

வளர்ச்சியை ஏன் மற்ற மாகாணங்களோடு ஒப் பிட்டே பேசுகிறீர்கள்? மேல் மாகாணம் வளர்கிறது, தென் மாகாணம் வளர்கிறது, வடக்கு வளரவில்லை என்பது சரிதானா? மற்ற மாகாணங்களுக்கும், வட மாகாணத்துக்கும் வழங்கப்பெற்ற வாய்ப்புகள் சரி சமமாக இருந்திருக்கின்றனவா? இல்லையே. போரால் எவ்வித பாதிப்பும் பெறாத தென் மாகாணக் கிராமப் பாடசாலைக்கான அரசின் அக்கறையான கவனிப்பு, சின்னாபின்னமான வடக்கின் தீவகப் பாடசாலைகளுக்கு உள்ளதா? இல்லையே. வடக் கில் நடந்ததைப் போன்ற கொடிய போரை, பிற மாகாணங்கள் சந்தித்தனவா? அதனால், புலமை இழப்பை அடைந்தனவா? இல்லையே. 2019 இல் பரீட்சை எடுத்த பிள்ளைகளைப் பற்றி யோசித்தீர் களா? யார் அவர்கள்? எப்போது பிறந்தவர்கள்? இப்போது பெறுபேற்றைப் பெற்ற மாணவர்கள், 2003 அல்லது 2004 இல் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். அப்போது வடமாகாணப் பெற்றோர் அனைவரையும் தங்கள் சொந்த வாழிடத்திலேயே இருக்க யுத்தம் விட்டதா? இல்லையே. இடம்பெயர்ந்து தென் மாகாணம், மேல் மாகாணம், மத்திய மாகா ணம் என்று தப்பியோடியவர்கள்தாமே நாங்கள் எல் லாம்? அவ்வாறுதானே ஆளுமை மிக்க ஆசிரியர் கள் பலரும் ஓட நேர்ந்தது.

### ஒரு கேள்வி

தென் மாகாணம் வளர்கிறது, மேல் மாகாணம் வளர்கிறது, வடக்கு வளரவில்லை, என்பவர்களிடம் ஒரு கேள்வி. தென் மாகாண, மேல் மாகாணங்களின் பெறுபேற்று வளர்ச்சிக்கு வடமாகாண மாணவர்க ளின் பங்களிப்பு இல்லையா? அவ்வாறே, தென் மாகாண, மேல்மாகாண பெறுபேற்று வளர்ச்சியில், வடமாகாண ஆசிரியர்களின் ஆளுமை மிக்க பங்களிப்பு இல்லையா? இருக்கிறது என்பதுதான் இந்தக் கேள்விகளுக்கான உறுதியான பதில். ஒருபுறத்தில் இப்புலமை இடப்பெயர்வானது, வடக்கு மாகாணத்தை வறியதாக்கியதோடு, பிற மாகாணங்களைச் செழிக்கவும் செய்தது என்பதே உண்மை. அதனால்தான் வடமாகாணத்தின் பாதிப்பு இரட்டிப்பாக, பாரதூரமாகத் தெரிகிறது. வேண்டுமானால், பரீட்சை எடுத்த மாணவர் தொகையைப் பாருங்கள் இது புரியும். அந்தப் பட்டியலிலும் வடக்கு மாகாணம் மிகமெலிந்து கடைசியாகத்தானே நின்று கொண்டிருக்கிறது.

கடந்தமுறை இருபதாயிரத்துக்குக் குறைவா கத் தோற்றிய மாணவர் தொகையைக் கொண்ட ஒரே மாகாணம் வடக்கு மட்டுமே. இந்த மாகாணத் திலிருந்து ஐந்து பாடங்களுக்கு மேலே தோற்றிய முதலமர்வுப் பரீட்சார்த்திகள் வெறும் 16ஆயிரத்து 622பேர் மட்டுமே. சற்றே மேல் மாகாணப் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையைப் பாருங்கள். அது 79ஆயிரத்து 835பேர். எவ்வளவு வேறுபாடு. இப்பெருத்த தொகையில் இடம்பெயர்ந்த வட மாகாண மாணவர் இல்லையா? அவர்களால் மேல் மாகாணச் சித்திகள் அதிகரிக்கவே இல்லையா? இதை – இந்த அடிப்படை மூலத்தை – அறிந்து கொள் ளாமலேதான் பலரும் அறிக்கை விடுகின்றார்கள்.

### ஆளுநருக்கு வந்த மறதி

'வருடமொன்றில் ஆசிரியர்கள் 153 நாள்கள் மட்டுமே பணிபுரிகிறார்கள். அவ்வாறிருக்கையில் அவர்களால் தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்க முடியாதா?' எனக் கூறி, பின்னடைவுக்கான காரணமாக, ஆசிரியர்களின் தவற்றையே வட மாகாண ஆளுநரும் ஒரு கூட்டத்தில் சுட்டுகிறார். ஆமாம், போரை அவரும் வசதியாக மறந்து விட்டார்.

வடக்கின் இன்றைய கடைசி நிலைக்குக் காரணம் கல்வித்துறை சார்ந்த பலருங்கூட, ஆளுக்காள் பந்தை மாற்றிப்போட்டு, வீழ்ச்சிக்குக் காரணம் நானில்லை என்பதாக நிம்மதிப் பெருமூச்சு விடுகி றார்கள். கல்வி நிர்வாகச் சேவையினர், ஆசிரியர்க ளைக் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆசிரியர்கள் மாண வர்களைச் சாட்டுகிறார்கள். மாணவர்கள் பாடசா லையை, பாடசாலை பெற்றோரை. அனைவரும் சேர்ந்து குற்றஞ் சாட்டவென, பாவம் இம்முறை ஒரு பகுதியார் மாட்டிக்கொண்டார்கள்.

(8 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# பச்சைப்பசும் கிளிநொச்சி மரம் நடுகை ஆரம்பமானது

கிளிநொச்சி, ஜூன் 18

பச்சைபசும் கிளிநொச்சிஎனும் தலைப்பில் மரம் நடுகைச் செயற்றிட்டம் ஒன்று நேற்றுக் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தினரால் பரந்தன் – முல்லைத்தீவு வீதியில் பூங்காவனச் சந்தியிலிருந்து பன்னங்கண்டிவரை முதற்கட்டமாக ஒரு கிலோ மீற்றருக்கு வீதியின் இரு புறமும் சுமார் 400 தேக்கும ரக் கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல்அகழ்வு, சட்டவிரோத மரம் காடழிப்புஎன்பவற்றால் சூழல் மிக மோசமாகப் பாதிப்படைந்து வருகின்ற சூழலில் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சூழலை நேசிக்கின்றவர்களின் பலத்த வரவேற்பை பெற்றுள்ளது.

அந்தவகையில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள முதற்கட்டமான பச்சைப்பசும் தரம் நடுகை செயற்றிட்டத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டத்தின் தொடர்ச்சிவரும் காலங்களில் தொடராக இடம்பெறும் எனவும், இது தனியே ஒரு தரப்பினால் மட்டும் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது என்பதனால் நீர்ப்பாசனத் திணைக்களம், வனவளத் திணைக்களம், பிரதேச சபை, பிரதேச செயலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய திணைக்களங்களுடன் இணைந்து கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகம் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது..

றோட்டறிக் கழகத்தின் தலைவர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அரச அதிபர், பிரதேச செயலர், பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வடக்கின் கல்வி...

(8 ஆம் பக்கம் பார்க்க...)

அவர்கள் தொண்டர் ஆசிரியர்கள். வடக்கில்தான் அவர்கள் அதிகம். தெற்கில் இல்லை. மேற்கில் இல்லை, ஆகவேதான் வடக்கில் பெறுபேற்று வீழ்ச்சியென ஆளுக்காள் போட்டுத் தாக்குகிறார்கள்.

கடும் பிரச்சினையான காலகட்டத்தில், வேலை குறித்த உத்தரவாதம் இல்லாத நிலையிலும் மன உளைச்சலோடு – அவ்வாசிரியர்கள் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது அல்லவா? அவர்களுள் சிலர் பாடத்துக்குப் பொருத்தமற்றவர்களாக இருக்கலாம். அது விதிவிலக்கே. அப்படியானால் கல்வி நிர்வாகச் சேவையில் இருக்கும் அத்தனைபேரும் குறித்த பாடத்துக்குப் பொருத்தமானவர்களா? இல்லையே. குறித்தவொரு பாடத்தைப் பாடசாலையில் கற்பிக்காமலேயே, நேரஅட்டவணையை அதிபரிடமிருந்துபொய்யாகப்பெற்று, இன்றுஅப்பாடத்துக்கான அதிகாரியென, பொருத்தமற்றமுறையில் கல்வி நிர்வாகச் சேவையிலும் சிலர் உள்ளனர் அல்லவா? பட்டம் பெற்ற பாடத்தைக் கற்பிக்காமல், அருகேயுள்ள பாடசாலையில் பணிபுரிய வேண்டும் என்பதற்காக வேறுபாடம் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் உள்ளனர் அல்லவா? இவர்கள் விதிவிலக்குகள். எனவே இப்பின்னடைவுக்கான காரணத்தை, இத்தகைய விதிவிலக்குகளிடம் தேடாமல், போரின் நீண்டகாலக் கோர விளைவாகக் காண்பதே நேர்மையானது.

## போரே காரணம்

கல்வியாளர் யாருமே யுத்தத்தின் பின்விளைவாக இன்றைய இக்கல்வி நிலையைக் காணத் தயாரில்லை. அவர்களும் யுத்தத்தின் நீண்ட கொடிய விளைவை மறந்துவிட்டனர். உண்மையில் வடமாகாணத்தின் இந்தப்பின்னடைவை, போரின் விளைவாகப் பார்க்க வேண்டுமே தவிர, ஆசிரியரைச் சமமாகப் பங்கிடவில்லை, தொண்டர் ஆசிரியர்கள் கற்பிக்கவில்லை, பாடசாலைகள் சரியில்லை, பெற்றோர் அக்கறைப்படவில்லை முதலியவற்றால் நேர்ந்தது எனக் கொள்ள முடியாது. கல்வி வளர்ச்சி என்பது இன்று 'ஏ' சித்திகளை அதிகமாகப் பெறுவது என்ற கணிப்பில் வடமாகாணம் கல்வியில் வீழ்ச்சி அடைகிறது என்று சொல்லும் அனைவருக்கும் நிறைவாக ஒன்றை உரைக்க விரும்புகிறேன்.

உண்மையில் கணிப்பீடுகள் காட்டும் சித்தி வீதத்துக்கும், தரமான கல்வி வளர்ச்சிக்கும் சம்பந்தமுண்டா? என்று சற்றே நிதானிப்பது நலம். 'ஏ', 'பி' சித்திகள் பெறுவது கல்வி வளர்ச்சியாகுமா? இன்றைய உயர்சித்திக்கும் திறன் ஆற்றலுக்கும் சம்பந்தமிருக்கின்றதா? என் தந்தையாரின் தலைமுறையில் 'எஸ்' சித்தி பெற்றவரின் கல்வி மட்டம் இன்றைய தலைமுறையில் 'ஏ' சித்தி பெறும் மாணவரிடம் இல்லை என்பதே யதார்த்தமாகும். எனவே, 'ஏ' சித்திகள் பெருகுவதைக் கொண்டு, கல்வி வளர்ச்சி அடைகிறது என, பொய் மகிழ்ச்சி கொள்வதில் அர்த்தமேயில்லை. அதன் மறுதலையாக, 'ஏ' சித்திகள் குறைவு, அதனால் வடக்கில் கல்வி வீழ்கிறது என்று ஒப்பாரியிடுவதும் தவறு. வடக்கில் மட்டுமல்ல, இலங்கை முழுவதும் இதுதான் நிலைமை. சற்றே பொய் ஒப்பனைகள் களைந்து நிதர்சனத்தைப் பாருங்கள். சித்திகள் பல்கிப் பெருகுகின்றன. அதுவும் 9 'ஏ'கள் சகட்டு மேனிக்கு முளைக்கின்றன. ஆனால், இதை வைத்துக் கல்வி வளர்கின்றது என்று மட்டும் தயவுசெய்து சொல்லாதீர்கள். தன்னைத் தானே நிதானிக்க முடியாத, ஒரு சின்னப் பிரச்சினையைச் சமாளிக்கத் தெரியாத, 9 'ஏ'க்கள் பெருகுவது எப்படி வளர்ச்சியாகும்?

தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் பாடமாக்கச் சொல்லி, தான் பாடமாக்கிய பகுதியை வினாத்தாளில் கண்டவன் – வென்றவன். அவ்வாசிரியர் பாடமாக்கச்சொல்லித்தான் தயாரப்படுத்தியதை அன்றிப் பிற பகுதியைப் பரீட்சையில் கண்டவன் – தோற்றவன். இதுதானே இன்றைய சமன்பாடு. இதில் வெல்வது என்பதும், ஒருவகையில் தோற்பதுதானே!

# கிளிநொச்சியில் இருந்து தம்புள்ளைக்கு எடுத்துச் செல்லப்பட்ட 20 கிலோ கஞ்சா

## வவுனியாவில் மடக்கப்பட்டது; ஒருவர் கைது





கிளிநொச்சியில் இருந்து தம்புள்ளைக்குச் சிறிய ரக சொகுசு பட்டா வாகனத்தில் சூட்சுமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட 20 கிலோ கஞ்சா வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இன்று காலை 10 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

கிளிநொச்சியில் இருந்து தம்புள்ளை நோக்கி சென்ற சிறிய ரக சொகுசு பட்டா வாகனம் வவுனியா, புதிய பஸ் நிலையம் அருகில் பயணித்த போது வவுனியா பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சூட்சுமான முறையில் வாகனத்தின் பின் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கிலோ கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டது.

அவை ஒவ்வொன்றும் 2 கிலோ வீதம் 10 பொதிகளாக மீட்கப்பட்டன. இந்தக் கஞ்சா பொதிகளை கொண்டு சென்றமை தொடர்பில் அவ்வாகனத்தின் சாரதியான பொலனறுவையைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வாகனத்திற்குப் பாதுகாப்பாகச் சென்ற சொகுசு காரும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். விசாரணைகளின் பின் அந்த நபரையும், கஞ்சாவையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேர்தலில் கோட்டாபயவின் படங்கள் பயன்படுத்த தடை

கொழும்பு, ஜூன் 18

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் படங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசாரங்களுக்கு ஜனாதிபதியின் படங்கள், பெயர் மற்றும் பதவியைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் ஆலோசனை அறிக்கைக்கு அமைய இந்த விடயம் வெளியாகியுள்ளது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஜனாதிபதி கோட்டாபயவின் பெயர், பதவி மற்றும் படங்களை அவர்களின் பிரசாரங்களுக்கு பயன்படுத்துவதற்கு அக்கறை காட்டியமையினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிகள் அல்லது சுயாதீன வேட்பாளர்கள் உட்பட எவரும் தனது பெயர், பதவி, படத்தைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துகின்றமையை ஜனாதிபதி கோட்டாபய விரும்பவில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேயிலை ஏற்றுமதி வரி தற்காலிகமாக நீக்கம்!

கொழும்பு, ஜூன் 18

தேயிலை ஏற்றுமதிக்கு அறவிடப்படும் 3.50 ரூபா வரியை 6 மாதங்களுக்கு இடைநிறுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்துள்ளார்.

தேயிலை ஏற்றுமதியை ஊக்கப்படுத்த இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# தமிழரின் தொன்மையையும் இருப்பையும் அழிப்பதே கிழக்கு தொல்லியல் செயலணி

## அதை எதிர்ப்பதுடன் கண்டிக்கிறது திருமலை பொது அமைப்புக்களின் ஒன்றியம்

தமிழர்களின் தொன்மையையும் இருப்பையும் கேள்விக்குள்ளாகும் அரசியல் வேலைத் திட்டங்களை வன்மையாகக் கண்டித்துள்ளது திருகோணமலை பொது அமைப்புக்களின் ஒன்றியம்.

கிழக்கு மாகாணத் தொல்லியல் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணி நியமனம் தொடர்பாகத் திருகோணமலை பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: ஆனி 2ஆம் திகதி, 2020ஆம் ஆண்டு இலங்கை ஜனாதிபதியால் அதிவிசேட வர்த்தமானியூடாக வெளியிடப்பட்ட அறிவிப்பின் பிரகாரம், கிழக்கு மாகாண தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு கொடுப்பதற்கென பதினொரு அங்கத்தவர்களைக் கொண்ட செயலணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (தலைவர்), கிழக்கு சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர், அரிசிமலை பௌத்த நாயக்க தேரர் உட்பட பௌத்த பிக்குகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

முன்மொழியப்பட்ட பெயர்களில் இரண்டாவது இடத்தில் இருப்பது அரிசிமலை பௌத்த நாயக்க தேரரே. கிழக்கு மாகாணத்தை குறிப்பாக திருகோணமலையை சிங்கள பௌத்த மயமாக்கியதில் அவரின் வகிபங்கு இன்றியமையாதது.

இப்படியான ஒருவரை நியமித்தது இச்செயலணியின் உள்ளெண்ணத்தை வெளிக்கொணருகின்றது. இவர் ஏற்கனவே 4 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தை இதே நிகழ்ச்சி நிரலுக்காக கோரியிருந்தார் என்பதனையும் அவற்றில் ஆயிரத்து 200 ஏக்கர் நிலத்திற்கு அனுமதி வழங்கும் செயன்முறை கொழும்பில் இறுதிக் கட்டப் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றது என்பதனையும் நாம் அறிவோம்.

முற்றுமுழுதாக சிங்கள இனத்தவர்களைக் கொண்டமைக்கப்பட்ட செயலணியின் நியமனம் குறிப்பாக கொவிட் – 19 நெருக்கடி காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதன் உள்நோக்கத்தை கேள்விக்குட்படுத்த வேண்டிய அவசியம் எழுகின்றது.

மகாவம்ச மனநிலை கொண்ட சிங்கள அரசுகளின் ஒற்றை அரசியல் நிகழ்ச்சித் திட்டமாக இது, சிங்கள – பௌத்த ஒற்றைக் கலாசாரத்தைக் கொண்ட தேசக் கட்டுமானப் பணியில் முதலிடப்படுகிறது. இந்த ஒற்றைக் கலாசாரக் கட்டமைப்பின் உச்சக்கட்டமாக, அரச இயந்திரக் கட்டமைப்பு வலுவை மையப்படுத்தி, இராணுவமயப்படுத்தி, சிறிலங்கா, சிங்கள – பௌத்த தேசமே என மீளவும் தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனக் குழுக்களுக்கும் நினைவூட்டி வருகின்றது.

இந்த நிலையில், இந்தச் செயலணியின் 4ஆவது பணியாக சிறிலங்காவின் தனித்துவத்தைப் பேணிப் பிரசாரம் செய்தல். ‘சிறிலங்கன்’ அடையாளக் கட்டமைப்பு சிங்கள – பௌத்தமாய் இருத்தலை மையப்படுத்தியது.

சிங்கள – பௌத்தமாய் இருத்தல் சிறிலங்காவின் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்வதில்லை, ஒற்றைக் கலாசாரத்தை மட்டுமே ஊக்குவிக்கின்றது. ஒற்றைக் கலாசார தேசியவாதக் கட்டமைப்பு தமிழின இருப்பை இலங்கையில் சிக்கலுக்கு உட்படுத்துகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளின் ஆரம்பப் புள்ளியாக இணைந்த வடக்கு கிழக்கும் தமிழர்களின் பூர்வீகத் தொன்மையும் மிக முக்கிய அலகுகளாகும். ஈழத் தமிழர்களின் பாரம்பரிய இருப்பைச் சிதைக்கும் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவற்றின் முதற்கட்டமாக வடக்குக் கிழக்குப் பிரிப்பு அரங்கேற்றப்பட்டது. பிரிப்புக்கு முன்னரேயே கிழக்கில் தமிழர்களின் செறிவைக் குறைத்துப் பல்லின பரம்பலை முன்னெடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதன் பின்னணியில்தான் தமிழ் பாரம்பரிய நிலங்களான அம்பாறை மாவட்டம், திருகோணமலை மாவட்டம் போன்றன தமிழர்களின் குடிசனப் பரம்பல் குறைந்த மாவட்டங்களாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

தொல்லியல் திணைக்களம் தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருவதை மறுப்பதற்கில்லை. இச்செயலணிக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நில அபகரிப்பின் தீவிரத்தன்மை சட்ட வலுவாக்கம் பெறுகின்றது. தொல்லியல் திணைக்களம் கிழக்கு மாகாணத்தில் ஈழத் தமிழர் பூர்வீகத்தின் இருப்பை திரிபுபடுத்தி, சிக்கலுக்கு உட்படுத்தி வரலாற்றியலை தனக்கு சாதகமாக வடிவமைத்துக் கொண்டு வருகின்றது.

இம்முயற்சியின் ஆகப் பிந்தைய வடிவம்தான் இச்செயலணி நியமனமாகும். ஈழத் தமிழர்களின் தொன்மையை சிக்கலுக்குட்படுத்தி ஏற்கனவே சிங்கள – பௌத்த தேசியவாத புழக்கத்தில் உள்ள ‘தமிழர்கள் வந்தேறு குடிகள்’ என்ற வரலாற்றுச் சொல்லாடலை வலுப்படுத்துவதோடு ஈழத் தமிழர்களின் தொன்மை இருப்பை கேள்விக்கும் உட்படுத்துகின்றது.

இவ்வாறு ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை சிக்கலுக்குட்படுத்துவதன் மூலம் ஈழத் தமிழ்களின் கூட்டு அரசியல் கோரிக்கைகளும் ஈழத் தமிழரின் நிலப்பரப்பும், ஈழத்து தமிழர் இருப்பின் தொன்மையும் சிதைக்கப்படும்போது தமிழர்கள் இந்த தேசத்திற்கு உரியவர்கள் அல்லர் என்ற பிம்பத்தை கட்டமைக்க முயல்கின்றது.

ஈழத் தமிழர்களின் நியாயமான அரசியல் கோரிக்கையை நீக்கி தமிழினத்தை ஏனைய சிறுபான்மை இனங்களைப் போல் கட்டமைக்க முயலுகின்றது. சிறிலங்கா கட்டமைக்கும் சிங்கள – பௌத்த ஒற்றைக் கலாசாரம் முஸ்லிம் மக்களுக்கான சனநாயக அரசியல் வெளியை மறுக்கின்றது. இவ்வாறு ஜனநாயக வெளியை மூடுதல் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுத்தலாகும்.

இவ்வாறான ஜனநாயக அரசியல் தளத்தில் முஸ்லிம் மக்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. தமிழர் அரசியல் கோரிக்கை முஸ்லிம் மக்கள் தவிர்த்த தாயகக் கோட்பாட்டை முன்வைத்ததில்லை. முஸ்லிம் மக்களை உள்வாங்கிய வடக்கு – கிழக்கைத் தமிழர் தாயக நிலப்பரப்பாகவே தமிழ் தேசியம் முன்வைக்கின்றது.

தமிழ் – முஸ்லிம் இணைப்பு மூலம்தான் இரு இனங்களும் தங்கள் உரிமைக் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை. இரு இனங்களுக்கான நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் மூலம்தான் எங்களுடைய இருப்பை தக்கவைத்துக்கொள்ள முடியும்.

இந்நேரத்தில், பரஸ்பர உறவைக் கட்டியெழுப்புவதோடு இருப்புரிமைக்காகச் சேர்ந்து குரல்கொடுப்போம். பெரும்பான்மை ஜனநாயகத்தில், பெரும்பான்மையினரின் தயவில் சிறுபான்மை இனக் குழுமங்கள் வாழ முடியும் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கி பெரும்பான்மை சனநாயகத்தின் அடிநாதமான ஒற்றையாட்சி அலகை பலப்படுத்துகின்றது.

மேற்கூறப்பட்டவைகள் பலப்படுத்தப்படும் போது சிங்கள – பௌத்த தேசியவாதத்தின் கோரிக்கைகள் வலுப்படுத்தப்படுகின்றன என்பது எமக்குத் தெரியாததல்ல.

கிழக்கில் தமிழர்களின் கூட்டு இருப்பையும், இருப்பின் பூர்வீகத்தையும் சிதைத்தல் ஒட்டுமொத்த ஈழத் தமிழரின் இன அடையாளத்தை இல்லாமற் செய்தலேயாகும். அவர்களின் முயற்சியில் அணுவும் பிசகாது அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கின்றன. இம்முன்னெடுப்புகளுக்கு எதிர்ப்புகள் எழாத வண்ணம் தமிழர்களைப் பிரித்து ஆளுவதன்மூலம் ஒற்றுமையைப் பலவீனமாக்கி வருகின்றது.

எனவே, எமக்குள் இருக்கும் உட்பூசல்களைக் கடந்து தமிழர்களின் அரசியல் கூட்டுக் கோரிக்கைகளின் நியாயத் தன்மையையும், அற ஒழுக்கத்தையும் தமிழர்களுக்கிடையேயுள்ள அற வலுவையும் முன்னிலைப்படுத்தி அடக்குமுறைக்கெதிராகக் குரலெழுப்ப வேண்டிய சூழலை நாம் எதிர்கொள்கிறோம்.

எனவே, இச்செயலணியை நாம் முற்றாக நிராகரிக்கின்ற அதேவேளை, எமது தொன்மையையும் இருப்பையும் கேள்விக்குள்ளாகும் அரசியல் வேலைத் திட்டங்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய சி.ஐ.டி. இயக்குநரை கைது செய்ய கோரிக்கை

### கொலைசெய்யப்பட்ட லசந்தவின் மகள் விமத்தார்



சி.ஐ.டியின் புதிய இயக்குநர் மீது தன்னுடைய தந்தையின் கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் உள்ளதால் அவரை உடனடியாகக் கைது செய்யும்படி படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளரான லசந்த விக்ரமதுங்கவின் மகள் அகிம்சா விக்ரமதுங்க கோரியுள்ளார்.

இது தொடர்பாகத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அவர் கடிதமொன்றை எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

எனது தந்தை லசந்த விக்ரமதுங்க 2009 ஜனவரி மாதம் அத்திடியவில் கொலை செய்யப்பட்டார். அவரது கொலை குறித்து சி.ஐ.டியினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

2010இல் பயங்கரவாத விசாரணை பிரிவின் (ரி.ஐ.டியின்) பொறுப்பதிகாரியாக காணப்பட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஆர்.பிரசன்ன ஜே.அல்விஸ் எனது தந்தையை கொலை செய்தவர்களை தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக ஆதாரங்களை மறைத்தார். சந்தேகநபர்களைக் காப்பாற்றினார் என 2019 ஒக்டோபரில் சி.ஐ.டி.யினர் கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான குற்றங்களிற்கு ஏழு வருட சிறைத் தண்டனையை வழங்கலாம். இதனைத் தொடர்ந்து பதில் பொலிஸ் மா அதிபர் அல்விஸை கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பதில் பொலிஸ் மா அதிபர் திடீரென தனது மனதை மாற்றிக்கொண்டார்.

சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அல்விஸ் அதன் பின்னர் கைது செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுமில்லை.

மாறாக மே 21ஆம் திகதி சி.ஐ.டி.யின் புதிய இயக்குநராக அல்விஸை நியமிப்பதை அங்கீகரிக்குமாறு அரசு விடுத்த வேண்டுகோளினைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டது.

பதில் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மார்ச் மாதம் 20ஆம் திகதி ஓய்வுபெற்ற பின்னர் விக்ரமரட்ண பதில் பொலிஸ் மா அதிபர் என்ற பதவியில் சட்டவிரோதமாக நீடிக்கின்றார் என்பது ஆணைக் குழுவிற்கு தெரியாமலிருக்கலாம்.

அரசமைப்பின்படி அரசமைப்பு பேரவையின் அனுமதியின்றி 14 நாட்களிற்கு மேல் எவரும் பதில் பொலிஸ் மா அதிபராக நீடிக்க முடியாது.

சி.ஐ.டி.யின் இயக்குநர் பதவியிலிருந்து அல்விஸை நீக்கி அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு நான் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை கேட்டுக் கொள்கின்றேன்.

அல்விஸ் கைதிலிருந்து தப்புவதற்கும் சி.ஐ.டி.யின் தலைவராக நியமிக்கப்படுவதற்கும் பதில் பொலிஸ்மா அதிபர் எந்த வகையில் உதவினார் என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன் – என அந்தக் கடிதத்தில் அகிம்சா வலியுறுத்தியுள்ளார்.

## வவுனியாவில் வாள்களுடன் தாக்குதல்; சந்தேகநபர்கள் இருவர் இன்று கைது!

வவுனியா, ஜூன் 18

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் வாள்களுடன் சென்று மோட்டர் சைக்கிளைத் தீக்கிரையாக்கிய சம்பவம் தொடர்பில் இன்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் வளவுக்குள் அதிகாலை புகுந்த நபர்கள் வீட்டின் கேற், ஜன்னல், கதவு என்பவற்றுக்கு வாளால் தாக்குதல் நடத்தியமையுடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டர் சைக்கிளையும் தீயிட்டு எரித்தனர். விலையுயர்ந்த நாய்க் குட்டிகளைக் கொண்டும் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் இரு இளைஞர்களைக் குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்துள்ளதுள்ளமையுடன் அவர்களிடம் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மேலும் சிலருக்கு இச்சம்பவத்துடன் தொடர்புள்ளதாகவும் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.06.2020 இல் வெளியிடப்பெற்றது.